**கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் - கனடா**
**இளையோருக்கான கல்விசார் போட்டிகள்**

## தமிழியல் அறிவுப்போட்டி - 2020

***15 வயதுக்கு உட்பட்டோருக்கான வினாக்கொத்து - விடைகள்***

1. வடமொழியில் எழுதப்பட்ட இந்தியப் பேரிதிகாசம் எவை?
   இராமயாணம், மகாபாரதம்.

2. தேசவழமைச் சட்டம் யாருக்குரியது?
   யாழ்பணத்திற்கு உரியது.

3. புகழேந்திப் புலவர் எழுதிய நூல் யாது?
   நளவெண்பா.

4. .பிரபந்தங்கள் புராணங்கள் தனிப்பாடல்கள் என்பன எக்காலத்தில் தோற்றம் பெற்றன?
   நாயக்கர் காலத்தில்.

5. சேக்கிழார் அவர்களால் எழுதப்பெற்ற நூல் யாது?
   திருத்தொண்டர் புராணம்..

6. “தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்“ என்று பாடியவர் யார்?
   திருநாவுக்கரசர்.

7. ஈழத்தமிழ் அரசர் காலத்தில் எழுந்த மருத்துவ நூல் யாது?
   பரராச சேகரம் எனும் மருத்துவ நூல்.

8. “என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே!“ என்று பாடியவர் யார்?
   திருமூலர்.

9. .தமிழுக்குத் தொண்டு செய்த கிறிஸ்துவப் பாதிரியார் மூவரின் பெயர்கள் கூறுக?
   ஜி.யூ.போப், ஜோஸப் பெஸ்கி, றொபாட் நொபிலி.

10. இலங்கை முழுவதையும் தன் ஆட்சிக்குட்படுத்திய தமிழ் நாட்டு மன்னன் யார்?
    இராசஇராசசோழன்.

11. கணக்கற்ற சித்தர்களில் முதற் சித்தர் என்பவர் யார்?
    திருமூலர்.

12. .சீறாப்புராணம் எந்த மதத்திற்குரியது?
    இஸ்லாமிய மதத்திற்குரியது.

13. ஆழ்வார்கள் எழுதிய பாசுரங்ககளின் தொகுப்பை என்ன பெயர் கொண்டு அழைப்பர்?
நாலாயிரதிவ்வியபிரபந்தம்

14. ."செவாலியர்" விருது பெற்ற தமிழ்த்திரைப்பட நடிகர் யார்?
சிவாஜி கணேசன்.

15. .தமிழ்மொழியில் உள்ள முதல் எழுத்துகள் எத்தனை?
30

16. .அநுராதபுரத்தைத தலைநகராகக் கொண்டு ஆண்ட தமிழ்மன்னன் யார்?
எல்லாளன்.

17. எட்டுத் தொகை நூல்கள் இரண்டு கூறுக?
புறநானூறு, புறநானூறு, கலித்தொகை, குறுந்தொகை

18. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய செய்தியைக் கூறும் நூல்கள் யாவை?
சிலப்பதிகாரம், தொல்காப்பியம்.

19. பூம்புகார் நகரம் எந்த நாட்டின் கடற்கரைப் பட்டணமாகவும் துறைமுகமாகவும் விளங்கியது?
சோழநாடு

20. முதலில் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட ஐரோப்பியார் யார்?
போத்துக்கீசர்.

21. தமிழில் முதலில் வெளிவந்த திரைப்படம் எது?
காளிதாஸ் (1931 )

22. சங்க காலத்தில் அரசரிடையே ஆரியம் விரவிய செய்தியை எதன் வாயிலாக அறிய முடியும்?
சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய முடியும்.

23. உயிரினங்களைப் பகுத்து வகுக்கும் பழந்தமிழ் நூல் யாது?
நீலகேசி.

24. விபுலாநந்தரின் இசை ஆய்வு நூல் எது?
யாழ் நூல்.

25. ஐஞ்சிறு காப்பியங்கள் எவை?
உதயண குமார் காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி.

26. “குறுப்பா“ எனும் இலக்கிய வடிவத்தை தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்த ஈழத்துக் கவிஞர் யார்?
மகாகவி உருத்திரமூர்த்தி.

27. தமிழர் திருநாள் எது?
தைப்பொங்கல்

28. தமிழர் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்ட, கடலில் விளையும் காற்றிசைக் கருவியின் பெயர் என்ன?
சங்கு.

29. அற இலக்கியங்களின் மணிமுடியாகத் திகழ்வது எது?
திருக்குறள்.

30. போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் என்ன?
பரணி இலக்கியம்

31. தமிழில் முதன் முதலில் எழுந்த பரணி இலக்கியம் யாது?
கலிங்கத்து பரணி

32. உரைநடையை தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் யார்?
வீரமாமுனிவர்.

33. பெரியபுராணத்தைப் பாடியவர் யார்?
சேக்கிழார்

34. தமிழில் வெளிவந்த முதற் செய்தித்தாள் எது?
சுதேசமித்திரன்.

35. தமிழில் தோன்றிய முதல் நாவல் எது?
பிரதாப முதலியார் சரித்திரம்

36. ஐரோப்பியர் வரவால் தமிழுக்கு அறிமுகமான இலக்கியங்கள் எவை?
புதுக்கவிதை, சிறுகதை, நாவல், திறனாய்வு இலக்கியம்.

37. ஈழத்தின் சிறந்த இயற்கைத் துறைமுகம் எது?
திருகோணமலைத் துறைமுகம்.

38. கடலில் அமிழ்ந்த தமிழர் பெருநிலம் எது?
குமரிக்கண்டம்.

39. தமிழில் இருந்து தோன்றிய மொழிகள் மூன்று கூறுக.
மலையாளம், தெலுங்கு, கன்னடம்.

40. நம்பியாண்டார் நம்பி என்ற புலவர் தொகுத்த பக்தி இலக்கியங்களை எப்படி அழைப்பர்?
திருமுறைகள்.

41. 2006 ம் ஆண்டு தமிழ்மொழிக்குக் கிடைத்த சிறப்பு எது?
செம்மொழி.

42. கி மு 3000 ஆண்டளவில் தோன்றிய தமிழ் இலக்கணம் எது?
தொல்காப்பியம்.

43. யாழ் குடாவில் உள்ள புகழ்பெற்ற தீர்த்தக்கேணி எது?
கீரிமலை.

44. அடங்காப்பற்று என அழைக்கப்பட்ட நிலம் எது?
வன்னி நிலம்.

45. திருகோணமலையை உலக வல்லரசுகள் விரும்பக் காரணம் என்ன?
பாதுகாப்பு மிக்க இயற்கைத் துறைமுகம்.

46. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை பாடியவர் யார்?
நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

47. தமிழாராய்ச்சி மாநாடு உருவாக பாடுபட்ட ஈழத்தவர் யார்?
தனிநாயகம் அடிகள்.

48. பண்டிதமணி எனச் சிறப்பிக்கப்பட்ட ஈழத்துச் தமிழ்ச் சான்றோர் யார்?
கணபதிப்பிள்ளை.

49. தேவாரம் பாடிய மூவர் யார்?
சம்பந்தர் - அப்பர் - சுந்தரர்.

50. ஈழத்தின் தமிழ் இலக்கிய திறனாய்வின் முன்னோடிகள் யாவர்?
பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் க.சிவத்தம்பி